# திருவருகைக்காலம்




**திருவருகைக் காலம்** (*Advent*) என்பது மேலைக் கிறித்தவ திருச்சபைகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற திருவழிபாட்டுக் காலங்களுள் ஒன்றாகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவை எதிர்நோக்கிக் காத்திருந்து, அதற்காகத் தயாரிக்கும் காலமாகத் திருவருகைக் காலம் உள்ளது.

## திருவருகைக் காலத்தைக் குறிக்கும் நான்கு மெழுகுவர்த்திகள்:

## *1.முதல் வாரத்தின் மெழுகுவர்த்தி-நம்பிக்கை*



இது தான் நம்பிக்கையின் மெழுகுவத்தி. இது மீட்பரின் வருகைக்காக காத்திருந்த நம் முதுபெரும் தந்தையர்களான - ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரை குறிக்கின்றது.

**"கவனமாய் இருங்கள், விழிப்பாய் இருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வருமென உங்களுக்கு தெரியாது"** - மாற்கு 13:33, ஆண்டவர் நம்மை விழிப்புடன் காத்திருக்கும்படி கேட்கின்றார். ஆனால் நாமோ உலக கவலைகளிலும், உலக கவர்ச்சிகளிலும் நம் மனங்களை செலுத்தி வாழ்ந்து வருகிறோம். இனியாவது "ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கின்றேன்" என்று கூறி அவரின் வருகைக்காக நம்மையே ஆயத்தப்படுத்துவோம்.

**செபம்:- இம்மானுவேலே இயேசு கிறிஸ்துவே! எல்லா நாடுகளும் எதிர்பார்க்கும் ஆண்டவரே! அனைத்து மக்களின் மீட்பரே! வந்து எங்களிடையே தங்கும்.**

## 2.இரண்டாம் வாரம்: அமைதி



இதுதான் அமைதியின் மெழுகுவத்தி. மீட்பரின் வருகை, வரும் காலம்,அவரின் இயல்புகள் போன்ற அனைத்து செய்திகளையும் தந்த இறைவாக்கினர்களான எசாயா, எரேமியா, தானியேல் போன்றோரை குறிக்கின்றது.

**"மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது"** - மத்தேயு: 3: 1

இறைவாக்கினர்கள் அனைவரும் மீட்பரின் வருகைக்காக நாம் எவ்வகை தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைத்துள்ளனர். நாம் அனைத்தையும் அறிந்திருந்தும் நம் வலுவின்மையாலும், விசுவாச குறைவாலும் மீண்டும் மீண்டும் ஆண்டவரை விட்டு விலகி செல்கிறோம். இனியாவது அவரில் நம்பிக்கை கொண்டு அவரை நாடி தேடுவோம்.

**செபம்:**

**ஓ இயேசு கிறிஸ்துவே அனைத்து உலகங்களின் அரசரே! எல்லா இதயங்களின் மகிழ்ச்சியே! விரைவில் வந்து உம் மக்களை மீட்டருளும்.**

*3.மூன்றாம் வாரம்:* ***மகிழ்ச்சி***



இது தான் மகிழ்ச்சியின் மெழுகுவத்தி. இது மீட்பரின் முன்னோடியான புனித திருமுழுக்கு யோவானை குறிக்கின்றது.

***"பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாகுங்கள்; அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள், பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பபடும்; மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும்; கோணலானவை நேராக்கப்படும்; கரடுமுரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பை காண்பர்"***-லூக்கா: 3: 4 - 6

நாம் மீட்பின் காலத்தை நெறுங்கிவிட்டோம். திருமகன் கிறிஸ்துவை அறச்செயல்கள் நிறைந்த வாழ்வினால் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கின்றோமா? அவர் வரும்போது அவரது வலப்பக்கம் நிற்கவும், விண்ணரசை அடையவும் ஏற்புடையவர்களாவோம்.

**செபம்:**

**உலகத்தின் ஒளியே உண்மையின் சுடரே! இயேசு கிறிஸ்துவே! வந்து எம்மை தேற்றும்.**

*4.* **நான்காம் வாரம்:** ***அன்பு***



இது அன்பின் மெழுகுவர்த்தி. அன்னை மரியாவையும அவர் கணவர் புனித யோசேப்பையும் குறிக்கின்றது.

**அவர் பெரியவராய் இருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்** -லூக்கா 1:32-33

மீட்பரை சந்திக்க அன்னை மரியாவும் புனித யோசேப்பும் எவ்வாறு ஆயத்தமாய் இருந்தனரோ அவர்களைப்போல் நம்மை மீட்க வந்த பாலகனை வரவேற்க நம்மை தயார்படுத்த இதுவே வாய்ப்பு. அன்னையின் எதிர்நோக்கையும், புனித யோசேப்பின் நேர்மைத்தனத்தையும் கொண்டு வாழ முயல்வோம்.

**செபம்:**

**உலகை கடந்த ஞானமே! உண்மை கடவுளின் வார்த்தையே! இயேசுகிறிஸ்துவே! வந்து மீட்பின் பாதையை எமக்கு காட்டும்.**

## இத்திருவருகைக்காலத்தின் முக்கியத்துவம்:

***"மாற்றம் உள்ளத்தை மாற்றனும்***
***மாற்றம் உதட்டினை திருத்தணும்***
***மாற்றம் நெஞ்சினில் மலரணும்***
***மாற்றம் வாழ்வில் மிளிரணும்"***

என்று எத்தனை கவிர்கள் கூறினாலும் மனித மனம் குரங்காக மாறி பழைய வாழ்க்கையைத் தான் தேடி செல்கிறது.

நாம் அனைவரும் இறைவனை விசுவசிக்கின்றோம் என்று விசுவாசப்பிரமாணத்திலும், திருப்பலியிலும் மனப்பாடமாக சொல்லி விடுகின்றோம். ஆனால் நம் விசுவாசம் நம் வாழ்க்கையில் எப்படி உள்ளது என தியானிப்போம். விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்ப்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி.

**இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி, *"என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்; உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்"* என்றார். யோவான்8:31,32**

**ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டிட சொன்னவர் நம் பிதா.**

**தாழ்ந்து போனவர் கெட்டு போவது இல்லை என்பதும்**

**பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதும் ஆன்றோரின் அமுத மொழி..**

பிரசங்கம் கேட்கும் போதெல்லாம் அருட்பணியாளர்கள் சொல்வதனை கேட்டும், மனம் வருந்தி மனமாற்றத்தை விதைக்க விட்டு முளைத்து உலகத்து முட்செடிகள் கொத்தி குதறிட மனம் மாற்றம் மறந்துபோய்விட மீண்டும் பழைய அணிநலன்களை அணிந்து கொண்டு வாழ்க்கை நகர்த்துவதே நம் வாடிக்கையாக மாறிவிட்டது.

பல நேரங்களில் நாம் இறைவனிடம் கேட்டும் விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்காமல் போகிறது. காரணம் நம் பாவங்களே தடையாயிருக்கிறது. இறைவார்த்தைகள் சொல்கின்றன.

**எசாயா:-59, மீட்க இயலாதவாறு ஆண்டவரின் கை குறுகிவிடவில்லை; கேட்க முடியாதவாறு ஆண்டவரின் காது மந்தமாகி விடவில்லை.** எங்கள் தீச்செயல்களே எங்களுக்கும், எங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன; எங்கள் பாவங்களே அவர் செவி சாய்க்காதவாறு அவரது முகத்தை எங்களுக்கு மறைத்துள்ளன. ஆகவே நாம் பாவங்களுக்கு மன்னிப்பைச் சமாதான உள்ளத்தோடு கேட்க வேண்டும். அப்போது நம் இறைவேண்டல் இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்கும். இந்த நம்பிக்கை விலையேறப்பெற்றதாய் வல்லமைமிக்கதாய் இருக்கும்.

இத்திருவருகைக்காலத்தில் இறைவார்த்தையை பற்றிக்கொண்டு, பிறரை அன்புசெய்து, நற்செயல்களின் மூலம் எங்களுடைய சிந்தனைகளை பயன்படுத்தி நம் இறைவனிடம் ஆழ்ந்த விசுவாசமும், அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டு நமது

பாவவழியினை விடுத்தது , செபவாழ்வில் நிலைத்து இறைவனைச் சார்ந்து வாழவும் இதற்கு வேண்டிய வல்லமையை இறைவன் நமக்கு அளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேண்டிநிற்போம்.



**ஆமென்**